| | |
|---|---|
| ந.க.எண். நுபா2 / 365 / 2009<br>நாள்: 30 / 01 / 2009. | உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர்<br>பாதுகாப்புத் துறை,<br>ஆணையாளர் அலுவலகம்,<br>சேப்பாக்கம், சென்னை 600 005. |

**சென்னை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுக் கூட்டம் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளர் தலைமையில் 23 / 01 / 2009 அன்று முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது. கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள் பின்வருமாறு:**

1. **அரசுத் துறை / நிறுவனங்களில் ஒரு குறிப்பிட்ட அலுவலரை நுகர்வோர் உரிமை மற்றும் தகவல் அலுவலராக நியமித்தல்**

- மருந்து கட்டுப்பாட்டுத்துறை, சென்னை மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், பேரூராட்சி நிர்வாகம், போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்புத் துறை, சென்னை மாநகராட்சி, தொழிலாளர் துறை, மாநகர போக்குவரத்து கழகம், BIS, BSNL, சென்னை மாநகர வளர்ச்சி குழுமம் ஆகிய துறைகள் / நிறுவனங்கள் நுகர்வோர் உரிமை மற்றும் தகவல் அலுவரை நியமனம் செய்து நியமன ஆணை அனுப்பி வைத்துள்ளனர்.
- பிற துறைகளான மின்சார வாரியம், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை, மருத்துவம் மற்றும் ஊரக நலத்துறை, நகராட்சி நிர்வாகம் , சட்டமுறை எடையாளவு கட்டுப்பாட்டுத் துறை, தொழில் மற்றும் வணிகத் துறை, தென்னக ரயில்வே மற்றும் எண்ணெய் நிறுவனங்கள் ஆகிய துறைகள் உடனடியாக நுகர்வோர் உரிமை மற்றும் தகவல் அலுவலின் நியமன விவரங்களை அனுப்பி வைக்க ஆணையர் கேட்டுக் கொண்டார். மேலும் இதற்கென இரண்டாம் நிலை அலுவலர் ஒருவரை நியமனம் செய்தால் குறைதீர் நடைமுறை சிறப்பாக அமையும் என தெரிவித்தார். நியமன அலுவலரின் பெயர் / தொலைபேசி எண் / மின் அஞ்சல் முகவரி ஆகியவற்றை அந்தந்த துறைகளின் இணையதளத்தில் வெளியிடுமாறும் இதனால் பொதுமக்கள் உரிய அலுவலரை எளிதில் அணுக ஏதுவாக இருக்கும் எனவும் ஆணையாளர் கருத்து தெரிவித்தார்.
**(நடவடிக்கை: மின்சார வாரியம், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை, மருத்துவம் மற்றும் ஊரக நலத்துறை, நகராட்சி நிர்வாகம் , சட்டமுறை எடையாளவு கட்டுப்பாட்டுத் துறை, தொழில் மற்றும் வணிகத் துறை, தென்னக ரயில்வே மற்றும் எண்ணெய் நிறுவனங்கள்**)

2. **உணவு பாதுகாப்பு மற்றும் இறக்குமதி செய்யும் உணவு பண்டங்கள் மீது கட்டுப்பாடுகள் விதித்தல்**

- உணவு பொருட்கள் குறிப்பாக வெளிநாடு உணவு பொருட்கள் வாங்கும் பொதுமக்களுக்கான தற்காப்பு விவரம் அதாவது பொருட்கள் வாங்கும் போது அவர்கள் கவனிக்க வேண்டிய அம்சங்கள் என்னென்ன என்பது குறித்து பத்திரிக்கை செய்தியாக வெளியிட பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை மற்றும் சட்டமுறை எடையளவ கட்டுப்பாட்டு துறைகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. மேலும் வணிக சங்கங்களின் உறுப்பினர்களை அழைத்து கூட்டம் ஒன்றை நடத்தி அதில் விற்பனைக்கு பொருட்கள் வாங்கும் போது அவர்கள் உறுதிபடுத்தி கொள்ள வேண்டிய அம்சங்கள் என்னென்ன என்பது குறித்து தெரிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு பயிற்சி தரவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.
- பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை இது தொடர்பாக ராணி, ஜீனியர் விகடன், இந்து ஆகிய நாளிதழ்களில் பத்திரிக்கை செய்தியாக விரிவாக வெளியிடப்பட்டுள்ளதாகவும் மக்கள் டி.வி. கலைஞர் டி.வி ஆகிய தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டதாகவும் இத்துறையின் இணை இயக்குநர் தெரிவித்தார்கள்.
- சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டுத் துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நடவடிக்கை விவரம் விரைவில் அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்தார்.
- வணிகர் சங்கங்களுக்கு விழிப்புணர்வுகூட்டம் நடத்த ஆணையர் வலியுறுத்தினார். மேலும் வணிக சங்கங்களை தொழில் சார்ந்து வகைகளாக பிரித்து தொழிலுக்கேற்றவாறு விழிப்புணர்வு கூட்டங்களை நடத்தி வணிகர்களுக்கு

பயிற்சி அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.
**(நடவடிக்கை: பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை / சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டுத் துறை)**

## 3. எரிவாயு இணைப்புகள் உபயோகம் மற்றும் விநியோகம்

- எண்ணெய் நிறுவன முகவர்கள் தன்னிடமே அடுப்பு வாங்க வேண்டும் என வற்புறுத்துவதாக தெரிவிக்கப்பட்ட புகாருக்கு எந்த முகவர் என்ற விவரம் எழுத்துமூலமாக புகார் அளிக்கும் பட்சத்தில் உடனடி நடவடிக்கை எடுப்பதாக பாரத் பெட்ரோலியம் கழக நிறுவன அலுவலர் தெரிவித்தார்.
- ஆணையர் உரிய ஆதாரங்களுடன் புகார் அளிக்க தெரிவித்ததை தொடர்ந்து இது தொடர்பாக நுகர்வோர் அமைப்பு பிரதிநிதி எரிவாயு இணைப்புடன் டீத்தூள் வாங்க வற்புறுத்துவதாக புகார் தெரிவித்தார். எழுத்து மூலமான புகாரையும் ஆதாரங்களுடன் பாரத் பெட்ரோலியம் கழக நிறுவன அதிகாரியிடம் அளித்தார். இதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தை அடுத்த கூட்டத்தில் தெரிவிக்க ஆணையர் கேட்டுக் கொண்டார்.
- அதிகமாக பணம் வசூலிக்கும் டெலிவரி பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாகவும் கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து 25 பணியாளர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட்டு சிறை தண்டனை அளிக்கப்பட்டு உள்ளதாகவும் தொடாந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எண்ணெய் நிறுவன அலுவலர் உறுதியளித்தார்.
- இவ்வாறான நடவடிக்கைகளை பத்திரிக்கை செய்தியாக வெளியிட்டால் தவறு செய்யும் மற்ற டெலிவரி பணியாளர்களும் திருந்த வாய்ப்பாக இருக்கும் எனவும் ஆணையர் கருத்து தெரிவித்தார். எனவே எண்ணெய் நிறுவனங்கள் பத்திரிக்கை செய்தியாக இதனை வெளியிடுமாறும் கேட்டுக் கொண்டார்.
- டெலிவரி பணியாளர்களுக்கு முறையான பணி நியமனம், ஊதியம் நிர்ணயம் செய்வதன் மூலம் இவ்வாறான குறைபாடுகள் நிரந்தரமாக களைய வாய்ப்பு உள்ளது எனவும் நுகர்வோர் அமைப்புகள் அளித்த ஆலோசனையை எண்ணெய் நிறுவனங்கள் பரிசீலிக்கலாம் என ஆணையர் தெரிவித்தார்.
- எரிவாயு உருளை விற்பனை பில் தேதியும் டெலிவரி தேதியும் ஒரு வார காலம் வரை வித்தியாசம் ஏற்படுவதாகவும் இதனால் டெலிவரி பணியாளர்கள் தவறு செய்ய வாய்ப்பு ஏற்படுவாகவும் நுகர்வோர் அமைப்பு பிரதிநிதி தெரிவித்தார். பில் தேதியில் டெலிவரி செய்வதில் நடைமுறை சிரமங்கள் இருப்பதாக தெரிவித்த எண்ணெய் நிறுவனங்கள் கால வித்தியாசத்தை 2 நாட்களாக குறைக்க நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தனர்.
**(நடவடிக்கை: அனைத்து எண்ணெய் நிறுவனங்கள்)**

## 4. பொது விநியோக திட்ட செயல்பாடுகள் குறித்த புகார்கள்

- காரணீஸ்வரர் கூட்டுறவு பண்டக சாலை-2 (LG 008)அங்காடியினை நல்ல கட்டிடத்திற்கு மாற்றம் செய்ய இடம் தேடப்பட்டு வருவதாகவும் சென்னை நகரில் சில கடைகள் உள்ள இடம் பழுதடைந்து உள்ளதால் நியாயவிலை கடைகளை நிர்வகிக்கும் ஏஜென்சிகளை அழைத்து ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட்டு பகுதடைந்த இடங்களில் உள்ள நியாவிலை கடைகளை வேறு இடத்திற்கு மாற்ற அறிவுரைகள் வழங்கப்பட்டதாக உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சென்னை (நகரம்) தெற்கு அலுவலக நிர்வாக அலுவலர் தெரிவித்தார். மேலும் சென்னை நகரில் நியாயவிலை அங்காடி அமைக்க வாடகை இடம் கிடைக்க வில்லை இடம் கிடைத்தாலும் வாடகை அதிகமாக இருப்பதாக ஏஜென்சிகள் தெரிவித்ததாக நிர்வாக அலுவலர் தெரிவித்தார். இருப்பினும் இடம் மாற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.
- நுகர்வோர் அமைப்புகள் தங்கள் பகுதிகளில் பழுதடைந்த இடங்களில் செயல்பட்டு வரும் நியாயவிலை கடைகளை மாற்ற வாடகைக்கு இடம் தேடி தந்து உதவ நுகர்வோர் அமைப்புகளை ஆணையாளர் கேட்டுக் கொண்டார்.
- கோட்டூர்புரம் பகுதியிலுள்ள TUCS அங்காடியில் கடைக்கு தொடர்பில்லாத நபர் ஆதிக்கம் செய்வதாக புகார் பெறப்பட்டதற்கு அங்காடி பணியாளர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் 3500 குடும்ப அட்டைகளுக்கு மேல் இணைக்கப்பட்டுள்ள மேற்படி அங்காடியை இரண்டாக பிரித்து மற்றொரு கடையை TNCSC நடத்த முன் வந்துள்ளதாகவும் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் நிர்வாக அலுவலர் தெரிவித்தார்.
- புகாருக்கு இலக்கான சேப்பாக்கம் வளாகத்தில் இயங்கிவரும் நியாயவிலை கடையினை கடந்த வாரம் துணை

ஆணையர் (நகரம்) தெற்கு மற்றும் உதவி ஆணையர் , சேப்பாக்கம் மண்டலம் இருவரும் திடீர் ஆய்வு செய்து விற்பனையாளரை எச்சரித்துள்ளதாகவும் தொடர்ந்து அதன் செயல்பாடுகள் கண்காணிக்கப்படுவதாகவும் நிர்வாக அலுவலர் தெரிவித்தார்.

- மேற்படி அங்காடியினை 100% தீவிர தணிக்கைக்கு உட்படுத்துமாறு ஆணையாளர் தெரிவித்தார்.
**(நடவடிக்கை : துணை ஆணையர் (நகரம்) தெற்கு)**

## 5. சென்னை நகரில் பொது மக்கள் அதிகம் பயன்படுத்தும் முக்கிய இடங்களில் நடைபாதையில் வாகனங்களை நிறுத்துதல்

- சென்னை மாநகராட்சியில் உள்ள 10 மண்டலங்களிலும்வாரத்திற்கு ஒருமுறையும் மாதத்தில் 4 முறைகளும் தணிக்கை செய்யப்பட்டு நடைபாதைகளில் நிறுத்தப்படும் வாகனங்களை காவல் துறை ஒத்துழைப்புடன் ஆக்கிரமிப்பை அகற்றி தண்டத் தொகை வசூலிக்கப்படுவதாக சென்னை மாநகராட்சியின் கூடுதல் சுகாதார அலுவலர் தெரிவித்தார். தொடாந்து நடைபாதைகளை ஆக்கிரமித்து நிறுத்தப்படும் வாகனங்களை பறிமுதல் செய்வதாகவும் தெரிவித்தார். மேலும் வாரம் ஒருமுறை சுகாதாரமற்ற உணவுகளை கண்டறியப்பட்டு அதனை பறிமுதல் செய்து அழிக்கப்படுகிறது எனவும் பாத்திரங்களை உரிமையாளர்களிடம் திரும்ப ஒப்படைத்து இனி இத்தகைய உணவுகளை விற்க மாட்டேன் என உறுதிமொழி பெறப்படுவதாகவும் தெரிவித்தார்.
- சென்னையில் உள்ள திருமண மண்டபங்களில் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதை தடை செயய பிப்ரவரி 2009 மாதத்தில் நடைபெறும் மன்ற குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அமல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.
- தெருவோர கடைகளில் விற்பனை செய்யப்படும் உணவு சுகாதாரமானதாக விற்பனை செய்ய தெருவோரக் கடை விற்பனையாளர்களுக்கு ஒரு பயிற்சி நடத்தி அதில் சுகாதாரமான உணவு தயாரிப்பது பற்றியும் எவ்வாறு சுகாதாரம் கெடாமல் விற்பனை செய்ய வேண்டும் என்பது குறித்தும் ஒரு விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட உள்ளது எனவும் இதற்கான தகவல் குறிப்பு அச்சிடப்பட்டு விட்டதாகவும் இப்பயிற்சி ஜனவரி 2009 மாதத்தில் அனைத்து தெருவோர கடை விற்பனையாளர்களுக்கும் நடத்தப்பட உள்ளது எனவும் சென்னை மாநகராட்சி கூடுதல் சுகாதார அலுவலர் தெரிவித்தார். இப்பயிற்சிக்கு கிடைக்கும் வரவேற்பினை பொறுத்து தொடாந்து இது போன்ற பயிற்சிகள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.
- பயிற்சி கூட்டத்தில் பங்கேற்கும் பயிற்சியாளர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் தகவல் குறிப்புகள் பயிற்சியின் போது வழங்கப்பட வேண்டும் எனவும் ஆணையாளர் கருத்து தெரிவித்தார்.
- மேலும் மேற்படி பயிற்சியினை தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் தெருவோர உணவு விற்பனையாளர்களுக்கு பயிற்சி அளிக்க தயாராக உள்ளதால் அவர்களை பயன்படுத்திக் கொள்ளுமாறும் கூடுதல் சுகாதார அலுவலரை ஆணையர் கேட்டுக் கொண்டார்.
- சென்னை நகரில் நுகர்வோர் மன்றம் நிறுவப்பட்டுள்ள கல்லூரி மாணவர்களும் தெருவோர உணவ விற்பனையாளர்களுக்கு உதவ ஆர்வம் காட்டுவதால் அவர்களையும் கூட்டத்திற்கு அழைத்து பயிற்சி அளிக்க கேட்டுக் கொள்ளலாம் எனவும் ஆணையர் ஆலோசனை தெரிவித்தார்.
**(நடவடிக்கை: சென்னை மாநகராட்சி / காவல் துறை)**

## 6. திரையரங்ககுளில் அதிக கட்டணம் வசூலிப்பது மற்றும் வணிக வரித்துறையின் முத்திரை அச்சடிக்கப்படாதது

- சென்னை நகரைப் பொறுத்தவரையில் காவல் துறை ஆணையரிடம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் வணிக வரித் துறையின் வசம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- இது தொடர்பாக எந்த திரையரங்கில் அதிக கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்றும் முத்திரையிடப்படாத நுழைவ ச் சீட்டு வழங்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டு புகார் கொடுத்தால் தொடர்புடைய காவல் ஆணையருக்கோ மாவட்ட வருவாய் அலுவலருக்கோ அனுப்பி நடவடிக்கை எடுக்கப்படும் என உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் இணை ஆணையாளர் தெரிவித்தார்கள்.
**(நடவடிக்கை: சென்னை காவல் துறை ஆணையர்)**

### 7. குழந்தைகள் பயன்படுத்தும் விளையாட்டுப் பொருட்களில் உள்ள ஆபத்து

- பாரிமுனை, தங்கசாலை , குறளகம், சென்ட்ரல் போன்ற இடங்களில் கத்தும் குருவி பொம்மை விற்பனை செய்யப்படுவதை கடந்த 2 மாதங்களில் கண்காணிக்கப்பட்டதில் எங்கும் பொம்மை விற்பனை செய்யவில்லை என துணை ஆணையர் (நகரம்) வடக்கு தெரிவித்துள்ளார்.
- புகார் அளித்த தன்னார்வ நுகர்வோர் பிரதிநிதியை, விற்பனை செய்யும் இடம் கண்டறியப்பட்டதும் தகவல் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும் கடந்த இரண்டு மாதங்களாக விற்பனை செய்யப்படவில்லை என புகார் அளித்த தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் பிரதிநிதி தெரிவித்தார்.
- இருப்பினும் மேற்படி பொம்மை விற்பனை செய்யப்படுகிறதா என தொடர்ந்து கண்காணிக்கப்படுவதாகவும் கண்டறியப்பட்டதும் மேற்படி பொம்மை வாங்கி ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதாக கூட்டத்தில் கலந்து கொண்ட துணை ஆணையர் (நகரம்) வடக்கு அலுவலக நிர்வாக அலுவலர் தெரிவித்தார்.
- குழந்தைகளுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியதாகையால் இது போன்று வேறு வகை பொம்மை விற்பனை செய்யப்படுகின்றதா என்பதை கண்காணிக்குமாறு ஆணையர் அறிவுறுத்தினார்.
- வெளிநாட்டு பொம்மை மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் அட்டைப் பெட்டிகளில் அடைத்து விற்பனை செய்யப்படுவதில் இறக்குமதியாளர் பெயர், முகவரி மற்றும் இதர விவரம் குறித்து கூட்டு தணிக்கை ( Joint Raid) மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டது. இதில் குன்னூர், கோயமுத்தூர் போன்ற பகுதிகளில் 28 அங்காடிகள் தணிக்கை செய்யப்பட்டு 6 வணிகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எடையளவு கட்டுப்பாட்டுத் துறை நிர்வாக அலுவலர் தெரிவித்தார்.
  **(நடவடிக்கை: துணை ஆணையர் (நகரம்) வடக்கு / சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டுத் துறை)**

### 8. சென்னை மாநகர போக்குவரத்து பேருந்து வசதிகள் குறித்து தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்

- சென்னை நகரத்தில் 3000 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஒரு பணிமனைக்கு 200 பேருந்துகள் உள்ளன. அனைத்து பேருந்துகளிலும் இரவில் டீசல் நிரப்புவது என்பது நடைமுறையில் இயலாததாகும். எனவே பயணத்திற்கு அசௌகரியமாக கருதப்படும் பேருந்தினை குறிப்பிட்டு தெரிவித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் .
- அய்யப்பன்தாங்கல் / கண்ணதாசன் நகர் / வியாசர்பாடி பணிமனை முறையாக பராமரிக்க ஜவஉறர்லால் நேரு திட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.
- போக்குவரத்து துறையினால் ஒரு வழிப்பாதையை விலக்கி கொள்ளப்பட்டதும் மீண்டும் பழைய வழித்தடங்களில் பேருந்துகள் செல்ல ஏற்பாடு செய்யப்படும். ஆனாலும் ஏதேனும் சில இனங்களில் குறைபாடு தெரிவிக்கப்பட்டால் அதனை களைய உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 9. ஸ்ரீபெரும்புதூர் வட்ட வழங்கல் அலுவலகத்தில் குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பிக்கும் மனுதாரர்களிடம் மீண்டும் மீண்டும் அத்தாட்சிகள் கோருதல்

- ஆணையர் அலுவலக கண்காணிப்பாளர் ஸ்ரீபெரும்புதூர் வட்ட வழங்கல் அலுவலகத்தை தணிக்கை செய்து அளித்த அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது குடும்ப அட்டை கோரும் மனுக்களுக்கு ஒப்புகை ரசீது தரப்படுகிறது. இணை ஆணையர் திடீர் ஆய்வு செய்து குடும்ப அட்டை கோரி பெறப்பட்ட மனுக்கள் மீது தணிக்கை செய்து மனு பெற்ற 60 நாட்களுக்குள் குடும்ப அட்டை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆணையர் அவர்களும் திடீர் ஆய்வு செய்து தணிக்கை செய்யப்படாமல் நிலுவையில் உள்ள மனுக்கள் மீது பிப்ரவரி 15-ந் தேதிக்குள் தணிக்கை செய்து குடும்ப அட்டை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணையர் தெரிவித்தார்.

### 10. தடை செய்யப்பட்ட மருந்துகள் விற்பனை குறித்த விவரங்களை மருந்தகங்களில் விளம்பரபடுத்துதல்

- தடை செய்யப்பட்ட மருந்துகள் விவரங்களை பத்திரிக்கை செய்தியாக வெளியிட மருந்து கட்டுப்பாட்டு துறை கேட்டுக் கொள்ளப்பட்டது.

- தற்போது தடை செய்யப்பட்ட மருந்து விவரங்களை மருந்து கட்டுப்பாட்டுத் துறையின் இணையதளம் www.cdsco.nic.in-ல் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இது குறித்த விவரங்களை நுகர்வோர் அறியும் பொருட்டு சுவரொட்டி தயாரித்து அனைத்து மருந்து கடைகளில் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மருந்து கட்டுப்பாட்டுத் துறை உதவி இயக்குநர் தெரிவித்தார்.
- கடந்த மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் தடை செய்யப்பட்ட மருந்து விவரம் இணைய தளத்தில் வெளியிட மருந்து கட்டுப்பாட்டுத் துறையினைக் கேட்டுக் கொண்டதை உடன் நடவடிக்கை எடுத்தமைக்கு ஆணையர் பாராட்டு தெரிவித்தார். மேலும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மருந்து கடைகளில் இச்சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ளதா என்பதை பார்த்து அவ்வாறு சுவரொட்டி ஒட்டாமல் ள்ள மருந்துகடை பற்றி மருந்து கட்டுப்பாட்டுத் துறைக்கு தெரிவிக்க கேட்டுக் கொண்டார்.

11. **நகராட்சி நிர்வாகம் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடனான காலாண்டுக் கூட்டங்களை நடத்தாதது:**

- இது குறித்து ஆணையர் அலுவலகத்திலிருந்து நகராட்சி நிர்வாக ஆணையருக்கும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் கடிதம் எழுதப்பட்டது. தஞ்சாவூர், கன்னியாகுமரி, விருதுநகர், நாகப்பட்டினம், பெரம்பலூர் மற்றும் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடன் கூட்டம் நடத்திட நகராட்சி ஆணையர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளனர்.
- மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் நடத்திடும் மாதாந்திர ஆய்வுக் கூட்டத்தில், இரு மாதங்களுக்கொருமுறை நகராட்சி ஆணையர்கள் நடத்தும் நுகர்வோர் பாதுகாப்புக் குழுக் கூட்டம் என்கிற பொருளை ஆய்வில் ஒரு பொருளாக சேர்த்துக் கொண்டு இக்குறைபாடு எளிதில் களையப்படும் என ஆணையர் ஆலோசனை தெரிவித்தார்.
- அனைத்து நகராட்சிகளிலும் இக்கூட்டம் முறையாக நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தி கடிதம் அனுப்ப நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக கூடுதல் இயக்குநரை ஆணையர் கேட்டுக் கொண்டார்.
- சென்னை மாநகராட்சி / தாம்பரம் நகராட்சிகளில் காலாண்டுக் கூட்டம் கூட்டப்படுவதில்லை என நுகர்வோர் அமைப்புகள் தெரிவித்த புகாரின் மீது நடவடிக்கை எடுத்து அடுத்தக் கூட்டத்தில் இது குறித்த நடவடிக்கை விவரத்தை தெரிவிக்கவும் நகராட்சி நிர்வாக துறையின் கூடுதல் இயக்குநரை ஆணையர் கேட்டுக் கொண்டார்.
- அடுத்தக் கூட்டத்தில் 149 நகராட்சிகளில் எத்தனை நகராட்சிகளில் தன்னார்வ நுகர்வோர் அமைப்ப ,களுடனான காலாண்டுக் கூட்டம் நடத்தப்பட்டது என்ற விவரத்தினை தெரிவிக்கவும் ஆணையர் கேட்டுக் கொண்டார்.

  **(நடவடிக்கை: நகராட்சி நிர்வாகம்)**

12. **புறநகர் பகுதிகளில் உள்ள டீ கடைகளில் கலப்பட தேயிலை விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்ட ப ,கார்:-**

- இது குறித்து அம்பத்தூர் நகராட்சியில் 20 டீ கடைக்காரர்கள் கலப்பட தேயிலை பயன்படுத்தியுள்ளதை கண்டுபிடித்தும் கூட அவர்களை எச்சரித்து விடப்பட்டுள்ளனர். இது பத்திரிக்கை செய்தியாக வெளி வந்துள்ளதாக நுகர்வோர் அமைப்பினர் புகார் தெரிவித்தனர்.
- தவறு என கண்டறிந்த பின்னரும் தண்டனை வழங்காமல் இருந்தால் தவறுகள் குறைய வாய்ப்பில்லை. எனவே உடனடியாக குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஆணையாளர் தெரிவித்தார்.

  **(நடவடிக்கை: சென்னை மாநகராட்சி )**

13. **தொலைபேசி சேவைக் குறைபாடு :**

- பட்டாபிராம் , பாரதிநகர் பகுதிகளில் BSNL கைபேசி சிக்னல் சரிவர கிடைப்பதில்லை என்ற புகாருக்கு

தற்போது இப்புகார் குறித்த நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக உதவி போது மேலாளர் (பொதுமக்கள் குறை) தெரிவித்துள்ளார்.

- BSNL பிரதிநிதி எவரும் கூட்டத்தில் கலந்து கொள்ளாதது குறித்து ஆணையர் வருத்தம் தெரிவித்ததுடன் அடுத்த காலாண்டுக் கூட்டத்தில் கலந்து கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணையர் தெரிவித்தார்.
  **(நடவடிக்கை: BSNL)**

14. **ரயில்வே துறையின் சேவைகள் குறித்து எழுப்பப்பட்ட புகார்கள்:**

- ரயில்வே துறையிலிருந்து பிரதிநிதிகள் எவரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளாததற்கு வருத்தம் தெரிவித்ததுடன் கடந்த கூட்டத்திலும் கலந்து கொள்ளாததை நினைவூட்டி இனிவரும் சென்னை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திலும் மாநில அளவிலான தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடனான காலாண்டுக் கூட்டத்திலும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென ஆணையர் கேட்டுக் கொண்டார்.
  **(நடவடிக்கை: தென்னக ரயில்வே)**

**15. அரசு போக்குவரத்து கழகம், காஞ்சிபுரம்**

- அரசு போக்குவரத்து கழக ஓட்டுநர் புகைபிடித்துக் கொண்டே வண்டி ஓட்டுவதாக தெரிவிக்கப்பட்ட புகார் மீது ஆணையர் அலுவலக நுவி1 / 45892 / 2008, நாள்:30/12/2008 நாளிட்ட கடிதத்தில் நடவடிக்கை விவரம் கோரப்பட்டது. இது தொடர்பான நடவடிக்கை அடுத்தக் கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என ஆணையர் தெரிவித்தார்.
  **(நடவடிக்கை: அரசு போக்குவரத்து கழகம், காஞ்சிபுரம்)**

16. **மின் நுகர்வோருக்கு அளிக்கப்படும் ரசீதில் சில இடங்களில் பெயர் மட்டும், சில இடங்களில் முகடவரியுடன் வழங்கும் நிலை**

- மின் நுகர்வோருக்கு அளிக்கப்படும் ரசீதுகளில் பெயர் மற்றும் முகவரியுடன் தான் வழங்கப்பட வேண்டும் என்பது வரையறுக்கப்பட்டது.
- ஆனால் சில இடங்களில் முகவரி முழுமையாக பெறாததால் இக்குறைபாடு நேர்ந்துள்ளதாகவும் இதனை களைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் மின்சாரத் துறையின் உதவி பொறியாளர் தெரிவித்தார்.
  **(நடவடிக்கை: தமிழ்நாடு மின்சார வாரியம்)**

17. **கோயம்பேடு பேருந்து வளாகத்தில் பொருட்கள் விலை அதிகமாக விற்கப்படுவதாகவும் குடிநீர் அதிக விலைக்கு மற்றும் சுகாதாரமற்ற குடிநீர் விற்பனை செய்வதாக தெரிவிக்கப்பட்ட புகார்.**

- கோயம்பேடு பேருந்து வளாகத்தில் பொருட்கள் விலை அதிகமாக விற்கப்படுவதாக பெறப்படுகின்ற ப ுகார்கள் குறித்து சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தான் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தொழிலாளர் துறையை சேர்ந்த அலுவலர் தெரிவித்ததின் அடிப்படையில், இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டு அடுத்த கூட்டத்தில் தெரிவிக்க எடையளவு கட்டுப்பாட்டுத் துறையும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமமும் கேட்டுக் கொள்ளப்பட்டன.
  **(நடவடிக்கை: சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டுத் துறை / சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்)**

18. **இதரப் பொருட்கள்:**

- நுகர்வோர் அமைப்புகள் சில வழித் தடங்களில் பேருந்துகள் சரிவர இயக்கப்படுவதில்லை எனவும் இதனால் ஆட்டோக்கள் அதிக கட்டணம் வசூலிப்பதால் நுகர்வோர் பாதிக்கப்படுவதாக தெரிவித்தனர்.
- மாநகர போக்குவரத்துக் கழக இணைய தளத்தில் பயணிகள் அறிந்து கொள்ளும் வகையில் வழித் தடங்கள் இயக்கப்படும் பேருந்துகள் மற்றும் நேரம் ஆகியவற்றை அறிந்து கொள்ளும் வகையில் வெளியிட்டால் பயணிகளுக்கு வசதியாக இருக்கும் எனவும் இத்தகைய வசதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க ஆணையர் கேட்டுக் கொண்டார்.
- குடும்ப விழாக்களுக்கு சிலிண்டர் தேவைப்பட்டால் வணிக உபயோக எரிவாயு உருளை தேவையான எண்ணிக்கை பெற்றுக் கொள்ளலாம். ஒரு சிலிண்டருக்கு வைப்புத் தொகை ரூ.1,500/- வீதம் செலுத்த வேண்டும். காலி சிலிண்டர் ஒப்படைக்கும் போது இத்தொகை திரும்ப வழங்கப்படும் என தெரிவித்தார். இந்த வசதியை பயன்படுத்திக் கொள்ள நுகர்வோர் தெரிந்து கொள்ளும் வகையில் அனைத்து ஏஜென்சிகளும் காட்சிப்படுத்த சுவரொட்டியாக அச்சிட்டு எண்ணெய் நிறுவனங்கள் நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொண்டார்.
- எண்ணெய் நிறுவனங்கள் இரு மாதங்களுக்கொருமுறை நடத்தும் கூட்டங்களுக்கு தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளை அழைத்து குறைபாடுகளை கேட்டு நிவர்த்தி செய்தாலே பெரும்பாலான குறைகள் களையப்படும் எனவும் இதற்கான நடவடிக்கைகளை எண்ணெய் நிறுவனங்கள் மேற்கொள்ள ஆணையர் கேட்டுக் கொண்டார்.
- பள்ளிகளில் மார்ச் மாதத்தில் ஆண்டுத் தேர்வு நடைபெறும் ஆதலால் மார்ச் 15ம் தேதி நடைபெறும் " உலக நுகர்வோர் உரிமை தினத்தை" பிப்ரவரி மாதத்திலேயே நடத்திடும் வகையில் தன்னார்வ நுகர்வோர் அமைப்ப ,கள் மாவட்ட வழங்கல் அலுவலர்களுக்கு முழு ஒத்துழைப்பு தந்து ஆலோசனைகள் வழங்கி சிறப்பாக நடத்திட ஆணையர் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளை கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட அலுவலர்கள் மற்றும் தன்னார்வ நுகர்வோர் அமைப்பினர்களுக்கு ஆணையர் அவர்கள் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே நிறைவுற்றது.

ஆணையாளர்.

பெறுநர்

1. சென்னை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள்
2. ஆணையாளர் அலுவலக முகவரி பட்டியலில் உள்ள தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் ( சென்னை நகரம் மட்டும்)

நகல்:
அரசு செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
சென்னை - 9.